கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக மாற்றும் முடிவினைக் கைவிடக்கோரி

கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் உண்ணாவிரதம்

மயிலாடுதுறை: அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளை பல்கலைக் கழகங்களாக மாற்றும் முடிவினைக் கைவிடக் கோரி கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மயிலாடுதுறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

ஏழை எளிய மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பினை பாதிக்கும் விதத்திலும் சமூக நீதியினைக் குழி தோண்டி புதைக்கும் விதத்திலும் அரசு மேற்கொண்டுள்ள கல்விக் கொள்கையைக் கைவிடக்கோரி கல்லூரி ஆசிரியர்களின் கூட்டு நடவடிக்கை குழு பிரிவின் சார்பில் மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் நடைபெற்றது.

அது சமயம் ஏ.வி.சி கல்லூரியின் மண்டலத் தலைவரும் தமிழ் பேராசிரியருமான முனைவர் தி.நெடுஞ்செழியன் பத்திரிக்கையாளர்களுக்கு விடுத்த செய்தியில் கூறியிருப்பதாவது:

அரசுக் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளைத் தமிழக அரசு ஒருமைவகைப் பல்கலைக் கழகமாக மாற்றும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. அந்த முடிவினைக் கைவிடவும், அதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவைக் கலைக்கவும் வலியுறுத்தி ஆசிரியர் மற்றும் அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், மாநிலத் தலைவர் முனைவர் பெ.ஜெயகாந்தி தலைமையிலும், தமிழ்நாடு நிதி உதவி பெறும் கல்லூரி அலுவலர் சங்கப் பொறுப்பாளர் (ஏவிசி கல்லூரி) ரவிச்சந்திரன் முன்னிலையிலும் உண்ணாவிரதம் நடைபெறுகிறது.

நூறு சதம் அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளை ஒருமைவகைப் பல்கலைக்கழகங்களாக மாற்றினால் அரசின் சொத்து தனியார் சொத்தாக மாறுவதோடு இடஒதுக்கீடு இல்லாமல் போகும். கல்வி கட்டணங்கள் பன் மடங்கு உயரும், ஏழை எளிய கிராமப்புற தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை உள்ளிட்ட சலுகைகள் பறிபோகும். மாணவர்களின் நலன்கள் பாதிக்கப்படுவதோடு ஆசிரியர்களின் பணி நிலை, பணிப்பாது காப்பு, ஓய்வூதிய பலன்கள் பாதிக்கப்படும் அபாயம் உருவாகி உள்ளது. எனவே இந்த உண்ணாவிரதத்தின் மூலம் மக்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு செல்ல விரும்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை வாழ்த்தி, இந்திய தொழிற் சங்க மைய நாகை மாவட்டச் செயலர் ஆர்.இராமானுசம், சிபிஎம் ஒன்றியச் செயலர் டி.கணேசன், மயிலாடுதுறை அனைத்து தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பொதுச்செயலர் இராயர், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க நாகை மாவட்டச் செயலாளர் ஸ்டாலின், இந்திய மாணவர் சங்க நாகை மாவட்டச் செயலர் சிங்காரவேலு, அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்ந்த துரை.அருள்ராஜன், அனைத்திந்திய மாணவர் நாகை மாவட்டச் செயலர் சுரேஷ் ஆகியோர் உரையாற்றினர்.

சாலை வசதிகேட்ட பொதுமக்கள் மீது

காவல்துறை தடியடி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

திருச்சி: காட்டூர் பகுதியில் தொடர் விபத்துகளைத் தவிர்க்க வழிகேட்ட பொது மக்கள் மீது தடியடி நடத்திய காவல்துறைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மாநகர செயலாளர் க.சுரேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

திருச்சி-தஞ்சை சாலையில் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலை விரிவாக்கப்பணியில் பொது மக்கள் குடியிருப்பு தெருக்களுக்கு செல்வதற்கும், பள்ளி, கல்லூரி, அலுவலகங்கள் செல்வதற்குமான பிரிவு ரோடுகள் அமைக்கப்படாமல் வாகனங்கள் நேராக தடையில்லாமல் சென்று வரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாலும் நான்குவழிச் சாலைகள் பணி ஆமை வேகத்தில் நடைபெறுவதாலும் சாலைகளைக் கடக்க முயலும்போது வாகனம் மோதி சாலை விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படுவது தொடர் சம்பவமாகியுள்ளது.

இந்நிலையில் மார்ச் 9ல் காலையில் காட்டூரில் உள்ள பள்ளிக்குச் செல்லும் ஆட்டோ மீது கார் மோதி பாதிக்கப்பட்ட 2 மாணவர்கள், ஆட்டோ டிரைவர் தீவிர சிகிச்சையில் மற்றும் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதனைக் கண்டித்து அப்பகுதி பொது மக்கள் மாணவ, மாணவியர்கள், கன்னியாஸ்திரிகள் என ஆயிரக் கணக்கில் ஒன்று திரண்டு, இனி விபத்துக்கள் ஏற்படாத வகையில் சாலையை கடக்க பிரிவு ரோடுகள் அமைக்க வலியுறுத்தினர். இதன் பேரில் காவல் துறையினர் உயரதிகாரிகளை சந்தித்துப் பேசி சாலை விபத்துக்களை தடுக்க தீர்வு காண்பதற்குப் பதிலாக போராட்டம் நடத்தியவர்கள் மீது காட்டுமிராண்டித் தனமாகத் தடியடி நடத்தியுள்ளனர்.

போராட்டம் நடத்திய பொது மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என 20 க்கும் மேற்பட்டோரை ரத்தம் சொட்ட காயம் ஏற்படுத்தி விரட்டி அடித்த காவல்துறையின் செயல் கண்டனத்திற்குரியதாகும்.

திருச்சி-தஞ்சை தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணியில் தொடர் விபத்துக்கள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் சாலை பணிகளை முடித்து பொது மக்கள் எளிதாக கடந்து செல்ல பிரிவு ரோடுகள் உடனடியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநகரச் செயலாளர் க.சுரேஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விதிமுறையை மீறி பள்ளி திறப்பால் குழந்தை பலி: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தஞ்சை: பேராவூரணி அருகே உள்ள ஆதனூரில் வி.ஆர்.வீரப்பா நினைவு மேல்நிலைப்பள்ளி செயல்பட்டுவருகிறது. மார்ச் 16 தெலுங்கு வருடப் பிறப்பையொட்டி அரசு விடுமுறை நாளாகும். ஆனால் அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகள் செயல்படாத நிலையில் வீரப்பா நினைவு பள்ளிக்கூடம் மட்டும் அரசு விதிமுறையை மீறி திறந்திருந்தது.

நேற்று காலை ஆவணம் பகுதியில் இருந்து பள்ளியின் வேன் குழந்தைகள் 21 பேரை ஏற்றிக் கொண்டு செங்கமங்களம் அருகே வேகமாக வந்தபோது திருப்பத்தில் நிலைதடுமாறி வேன் கவிழ்ந்தது. விபத்தில் 4ம் வகுப்பு படிக்கும் மாணவி பிரியங்காவின் கை துண்டாகி தஞ்சை மருத்துவமனைக்கு கொண்டுவரும் வழியில் இறந்தார். மேலும் படுகாயங்களுடன் சோனியா, ஹரிகரன், முத்தமிழ், அழகர், காயத்ரி, துர்காதேவி, கார்த்திகாதேவி, சண்முகராஜன் உள்ளிட்டோர் தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் திருஞானம் கூறுகையில், குடந்தை தீ விபத்து, வேதாரண்யம் குளத்தில் பள்ளிவேன் கவிழ்ந்தது பலி, தற்சமயம் பேராவூரணி விபத்து என்று தொடர்ச்சியாக நடந்துவருகிறது. மாநில நிர்வாகம், மாவட்ட நிர்வாகம் விதிமுறைகளை மீறும் பள்ளி நிர்வாகத்தின் மீது கடும் நடவடிக்கை எடுத்து இதுபோன்ற குற்றங்கள் மீண்டும் தொடராமல் இருக்கவும், இறந்த மாணவி பிரியங்காவிற்கு ஆழ்ந்த இரங்கலையும், காயமடைந்த குழந்தைகள் விரைவில் நலம் பெறவேண்டும் என்பதோடு, முறையாக ஆய்வு செய்யாத பள்ளிக் கல்வித் துறைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டனத்தை தெரிவிப்பதாகக் கூறினார்.

ராயபுரத்தில் மாணவர் பெருமன்றக் கிளை துவக்கம்

சென்னை: சென்னை ராயபுரம் பகுதியில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் கிளை தொடங்கப்பட்டது. கிளை அமைப்புக் கூட்டத்திற்கு எஸ்பிரபாவதி தலைமை தாங்கினார். பெருமன்றத்தின் வடசென்னை மாவட்டத் தலைவர் சி.தினேஷ், மாவட்ட துணைச் செயலாளர் பா.கார்த்தி ஆகியோர் பங்கேற்று வழிநடத்தினர்.

கிளையின் தலைவராக எஸ்பிரபாவதி, துணைத் தலைவர்களாக எம்.செல்வம், ஆர்.மோகன், செயலாளராக பி.கார்த்தி, துணைச் செயலாளர்களாக எம்.விஜயகுமார், எம்.அனுசுதா, பொருளாளராக எம்.சிராஜ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 2வது வட்டக்கிளை செயலாளர் இ.பாளையம் வாழ்த்துரை வழங்கினார்.

ஒருமைப் பல்கலைக் கழகங்கள் தொடங்குவதை தமிழக அரசு வாபஸ் பெறவேண்டும் எனவும், ராயபுரம் மேற்கு மாதா சாலையில், சரக்கு லாரிகள் நடமாட்டம் அதிக அளவில் உள்ளதால், பள்ளி மாணவர்கள் சிரமத்திற்காளாகின்றனர். எனவே இப்பகுதியில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திட மாநகரப் போக்குவரத்து காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொள்ளக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னாள் நீதிபதி குடும்பத்தினருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆறுதல்

சென்னை: உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி இரத்தினவேல் பாண்டியனின் துணைவியார் லலிதா அண்மையில் காலமானார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், தேசியக் கட்டுப் பாட்டுக்குழுத் தலைவர் ஆர்.நல்லகண்ணு, அவரது துணைவியார் அ.ரஞ்சிதம் ஆகியோர் நேற்று முன்னாள் நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் இல்லத்திற்குச் சென்று, அவருக்கும் அவரது குடும்பத்தினர்க்கும் ஆறுதல் கூறினர்.

மார்ச் 25ல் புதுச்சேரி சட்டப்பேரவைக் கூட்டம்

புதுச்சேரி: புதுச்சேரி சட்டப் பேரவை 2010 மார்ச் 25 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு சட்டப் பேரவை மண்டபத்தில் கூட்டப் படுகிறது. இத்தகவலை புதுச்சேரி சட்டப் பேரவை செயலாளர் மு.சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு ஆதரவாக செயல்படும் காவல் உதவி ஆய்வாளரை கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருக்கோவிலூர்: விழுப்புரம் மாவட்டம் மூங்கில் துறைப்பட்டு நகரில் கள்ளச்சாராய வியாபாரிகள், மணல் கடத்தல், கட்டப் பஞ்சாயத்துக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு பொது மக்கள்மீது பொய்வழக்கு தொடுத்திடும் மூங்கில் துறைப்பட்டு காவல் நிலைய உதவி ஆய்வாளரை கண்டித்து அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சங்கராபுரம் வட்டக்குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டத்தில் உள்ள மூங்கில்துறைப் பட்டு நகரில் 50 ஆண்டு காலம் வீடுகட்டி குடியிருப்பவர்கள் குடும்பத்திற்கு பட்டா, நகரில் அரசு கலைக்கல்லூரி, ஆரம்ப சுகாதாரநிலையம், சமத்துவபுரம் அமைத்திடவும், மூங்கில் துறைப்பட்டு பகுதியில் அரசு டாஸ்மாக் கடைகளுக்கு நிகராக கள்ளச்சாராயம், பார் நடத்துவது, கட்டப்பஞ்சாயத்து, சிறுவியாபாரிகள் மீது பொய் வழக்கு தொடுத்து பொதுமக்களை மிரட்டும் உதவி ஆய்வாளர் சுலைமான் மீது மாநில, மாவட்ட காவல் துறை இலாக்கா பூர்வ நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சங்கராபுரம் வட்டக் குழு சார்பில் மூங்கில்துறைப் பட்டு நகரில் வட்டச் செயலாளர் சுப்ரமணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட பொருளாளர் தேவேந்திரன், வட்ட துணை செயலாளர் கார்த்திகேயன், நகர தலைவர் ஷேக்காசிம், நகர பொருளாளர் ஏழுமலை முன்னிலை வகித்தனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் த. லெனின் கலந்துகொண்டு கண்டன ஊரையாற்றினார்.

மாநிலச் செயலாளர் த.லெனின் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசியதாவது:

இந்தியாவில் முதல் சுதந்திரப்போராட்டத்தில் பங்கு பெற்றது இளைஞர் பெருமன்றம். அதன் உறுப்பினர்கள் நாட்டின் மிகப் பெரிய சுதந்திர போராட்ட தலைவர் லாலாலஜபதிராவை வெள்ளையன் சுட்டு வீழ்த்தியபோதும் அன்னை சுதந்திரப் போராட்ட மங்கை வசந்திராதேவி அறைகூவல் விட்டார்.

சுதந்திர போராட்ட தலைவரை சுட்டு வீழ்த்திய வெள்ளைக்கார போலீஸ் அதிகாரி ஸ்காட் என்பவனையும் அவனது கூட்டாளிகளையும் சுட்டு வீழ்த்திட வேண்டும். இதனை செயலில் காட்டிட வீரமிக்க இளைஞர்கள் வேண்டும் என்று அழைத்தபோது எங்கள் மாவீரன் பகத்சிங் இதனை ஏற்று அன்று இந்திய மக்கள் விடுதலை பெற ஏற்ற சபதத்தை நிறைவேற்றினார்.

பஞ்சாப் மாநிலத்தில் அன்னியப்படை வீரர்கள், கொள்ளையர்கள் பஞ்சாபை தாக்கியபோது அவர்களை ஆயுதம் ஏந்தி காவல்துறை அதிகாரிகள் காவலர்களுடன் சேர்ந்து போராடி 200 இளைஞர்களின் உயிரை தியாகம் செய்த அமைப்பு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் ஒன்றுதான். எதற்காக பஞ்சாப் மாநில காவல்துறை உயர்அதிகாரி உலகில் உள்ள அனைத்து தொலைக்காட்சியின் முன்னால் பேட்டி அளித்தார்.

அதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் இளைஞர்அணி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் போல் பஞ்சாப் மாநிலத்தில் அனைத்து கட்சியும் செயல்பட்டால் எந்த மாநிலத்திலும் ஒரே நாளில் 24 மணி நேரத்தில் அனைத்து சட்டம் ஒழுங்கையும் காவல்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நாட்டை அமைதி பூங்காவாக மாற்றுவேன் என்று கூறினார்.

அப்படிப்பட்ட இந்த அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தமிழகத்தில் மணல்கொள்ளைக்கு எதிராக போராடிய நெல்லை மாவட்ட செயலாளர் சுடலைமுத்து, கள்ளச் சாராயத்துக்கு எதிராக போராடிய சேலம் சிவக்குமார், திருவாரூரில் ஜெயக்குமார் உள்ளிட்ட மூன்று மாவீரர்களை மக்களுக்காக இழந்துள்ளது சங்கராபுரம் வட்ட செயலாளர் சுப்ரமணியனை மூங்கில் துறைப்பட்டு காவல் நிலைய எஸ்.ஐ. கள்ளச் சாராய வியாபாரிகளிடம் துண்டு பிரசுரத்தை காட்டி அடித்து நொறுக்க உத்தரவு இடுகிறாராம்.

மூங்கில்துறைப்பட்டு காவல்நிலைய உதவி ஆய்வாளர் சுலைமான் தான் ஓர் அரசு ஊழியர் என்பதை மறந்து மதக்கலவரத்தை தூண்டிவிடும் அளவில் நாட்டின் இறையாண்மையை காப்பாற்றாமல் மதவாதிபோல் நடந்து கொள்வதை இளைஞர் பெருமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. நாட்டில் மதவாத பி.ஜே.பி, ஆர்.எஸ்.பி., இஸ்லாமிய மக்களுக்கு எதிராக பாபர் மசூதியை இடித்தபோது தொடர்ந்து சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக செயல்படும் இளைஞர் பெருமன்றம் என்பது குறிப்பிடத்தக்கது. சம்மந்தப்பட்ட உதவி ஆய்வாளர் சுலைமான் மீது நடவடிக்கை இல்லை எனில் மாநிலம் முழுக்க போராட்டம் நடைபெறும் என த.லெனின் பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் எம்.டேவிட்குமார், மாநிலக்குழு உறுப்பினர் செம்மலை, திருக்கோவிலூர் ஒன்றியச் செயலாளர் சிவராமன், மாவட்ட பொருளாளர் ராமசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்லூரி விரிவுரையாளர் போராட்டத்திற்கு ஆதரவு: ஏ.ஐ.எஸ்.எப்.

சேலம்: அரசுக் கல்லூரி கௌரவ விரிவுரையாளர்களுக்கு பணி நிரந்தரம் கோரி அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சேலம் மாவட்ட ஆட்சியர் பழைய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் எஸ்.பி.துரை பாலாஜி தலைமை வகித்தார். இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எ.ஈஸ்வரன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கிவைத்து உரையாற்றினார்.

தொடர்ந்து அரசுக் கலைக் கல்லூரி மாணவர்கள் ராஜா, அருள், முத்துலட்சுமி ஆகியோர் கோரிக்கை உரையாற்றினர். முடிவில் இளைஞர் பெருமன்ற மாநகர செயலாளர் க.பாரதி ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து நிறைவுரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதல்வர், ஆட்சிக்கு வந்தால் கல்லூரி கௌரவ விரிவுரையாளர்களை நிரந்தரப் படுத்துவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்தார். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் பணி நிரந்தரப்படுத்தக் கோரி போராடும் விரிவுரையாளர்களை பணி நீக்கம் செய்வதாக அரசு மிரட்டி வருவதைக் கண்டித்தும், உடனடியாக அரசுக் கல்லூரி விரிவுரையாளர்களை நிரந்தரப்படுத்தப்படுத்தக் கோரியும், விரிவுரையாளர்களுக்கு ஆதரவாக போராடும் மாணவர்களை சஸ்பெண்ட் செய்வதாக மிரட்டும் அரசுக் கல்லூரி முதல்வரைக் கண்டித்தும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தினர் கண்டன முழக்கங்கள் எழுப்பினர். இதில் அரசுக் கலைக் கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர் பெருமன்றத்தைச் சேர்ந்த தங்க மணி, சுரேஷ், சௌந்தர பாண்டியன், ராமு, ஹரிஹரன் உள்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

உடன்பாட்டையடுத்து விவசாய சங்கம் உண்ணாவிரதம் வாபஸ்

திருப்பூர்: திருப்பூர் மாவட்டம், செங்கப்பள்ளி, முத்தம்பாளையம் ஊராட்சி களுக்குட்பட்ட அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் இலவச சமையல் எரிவாயு அடுப்பு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கக்கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவரும், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான எஸ்.சின்னசாமி தலைமையில் மார்ச் 15 அன்று உண்ணாவிரதப் போராட்டம் அறிவிக்கப் பட்டது.

இந்நிலையில் மார்ச் 13 அன்று அவிநாசி தலைமையிட வட்டாட்சியர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஏப்ரல் 15க்குள் எரிவாயு அடுப்பு வழங்கப்படும் எனவும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் உடனடியாக வழங்கவும் உறுதியளிக்கப்பட்டு எழுத்துப் பூர்வமான உடன்பாடு ஏற்பட்டது. இதனடிப் படையில் மார்ச் 15 அன்று நடைபெறவிருந்த உண்ணாவிரதப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

பேச்சுவார்த்தையில் தலைமையிட வட்டாட்சியர், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் பி.பி.ஈஸ்வரமூர்த்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊத்துக்குளி ஒன்றியச் செயலாளர் பி.எஸ்.மணி, மாவட்ட விவசாயிகள் சங்க துணைத் தலைவர் எஸ்.சின்னசாமி, இந்திய தேசிய காங்கிரஸ் ஊத்துக்குளி வட்டாரத் தலைவர் எம்.சி.பழனிசாமி, செங்கப்பள்ளி கிராம நிர்வாக அலுவலர், ஊத்துக்குளி காவல்துறை அதிகாரி, வட்ட குடிமைப் பொருள் வழங்கல் அதிகாரிகள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.